# அறிவிப்புகள் 2018/2019

1. செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கள்ளக்குறிச்சி மற்றும் கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து சிகிச்சை மையங்கள்28.3 கோடி ரூபாய் செலவில்ஏற்படுத்தப்படும்.

2. காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, விபத்து காய சிகிச்சை ஒப்புயர்வு மையமாக(Centre of Excellence) 8.55 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

3. தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் (டாம்ப்கால்) மேலும் ஒரு தொழில் அலகு தொடங்கப்படும்.

4. 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் 9விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்களுக்கு 60 மருத்துவ அலுவலர்கள், 300 செவிலியர்கள் மற்றும் 342 இதர சுகாதார பணியாளர்கள் 5.91 கோடி ரூபாய் செலவில் புதிதாக பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

5. 12 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை மையங்களாகக் கொண்டு (HUB) அவற்றைச் சார்ந்து 160 மருத்துவமனைகளில் (Spokes) மாரடைப்பு சிகிச்சைப் பிரிவுகள் (STEMI) 9.2 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

6. 108 அவசரகால ஊர்திகளை விபத்து நிகழ்வுகளின்தேவைக்கேற்ப ஒதுக்கீடு செய்யும் பணி (Dynamic Allocation) சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT - Madras) மூலம் 24 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் மேம்படுத்தப்படும்.

7. திருப்பூர், இராமநாதபுரம், தென்காசி மற்றும் பொள்ளாச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகலும், புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் பன்னோக்கு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (MDCCU) 2.67 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

8. மாரடைப்பு (Heart Attack) மற்றும் பக்கவாதத்தினால்(Stroke) பாதிக்கப்படுபவர்களுக்கு உரிய நேரத்தில் (Golden Hour) உடனடி சிகிச்சை அளித்து உயிர்காக்கும் பொருட்டுThrombolysis வசதிகளுடன் கூடிய சிறப்பு அவசர கால ஊர்திகள் முதற்கட்டமாக முக்கிய நகரங்களில் இயக்கப்படும்.

9. திருவள்ளூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, அரூர் மற்றும் திண்டிவனம் அரசு வட்ட மருத்துவமனைகளில் 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் 4.4 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

10. அதிக சாலை விபத்துகள் நிகழும் பகுதிகளான சூளகிரி, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வட்ட மருத்துவமனையில் 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள்2 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

11. சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் மையம் இரண்டு கோடி ரூபாய் செலவில் மேலும் நவீனப்படுத்தப்படும்.

12. விழுப்புரம், தருமபுரி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தேனி, புதுக்கோட்டை ஆகிய 6அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புதிதாக கேத் லேப் (Cath Lab) கருவி 21 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

13. மருத்துவ அலுவலர்கள் மற்றும் செவிலியர்களுக்கு விபத்து மற்றும் அவசரகால சிகிச்சைக்கான சிறப்பு பயிற்சி 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

14. பக்கவாதத்தை கண்டறிவது, உடனடி மருத்துவ முதலுதவி அளிப்பது, உரிய மருத்துவமனைக்கு தகவல் பரிமாறுவது மற்றும் குறுகிய கால அளவில் மருத்துவமனையில் அனுமதிப்பது என உடனடியாக நோயாளிகளுக்கு பக்கவாத சிகிச்சை (SCRIPT) கிடைத்திட மேம்படுத்தப்பட்ட நெறிமுறைகள் (Protocol) வகுக்கப்பட்டு பணியாளர்களுக்கு 37 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

15. தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, காரப்பேட்டை அறிஞர் அண்ணா அரசு புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் சென்னை ஓமந்தூரார் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைகளுக்கு புற்றுநோய் சிகிச்சைக்காக லீனியர் ஆக்ஸிலரேட்டர் (Linear Accelerator) கருவி 50 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

16. 'தாய்' (TAEI)திட்டத்தின் கீழ் 18 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் உள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளுக்கு 141 புதிய செவிலியர் பணியிடங்கள் 2.37 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

17. 108 அவசரகால ஊர்தி சேவையில் பணிபுரியும் மருத்துவ நுட்புனர்களுக்கு திறன் மேம்பாட்டு (Skill Development) பயிற்சி 1.9 கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

18. தஞ்சாவூர், திருப்பூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டைதாய்சேய் நல ஒப்புயர்வு மையங்களுக்கு தேவையான சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பிற சுகாதாரப் பணியாளர்கள் 7.72 கோடி ரூபாய் செலவில் புதிதாக நியமனம் செய்யப்படுவார்கள்.

19. அதிக பிரசவங்கள் நிகழும் 47 சீமாங் (CEmONC) மையங்களில் தாய்சேய் நல பாதுகாப்பை கருதி 222 பாதுகாப்புப் பணியாளர்கள் 1.33 கோடி ரூபாய் செலவில் புதிதாக நியமனம் செய்யப்படுவார்கள்.

20. கடலூர் மற்றும் திருப்பூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் தாய்சேய் நல ஒப்புயர்வு மையங்களுக்கு நவீன மருத்துவக் கருவிகள் இரண்டு கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

21. கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு (SNCU)இரண்டு கோடியே ஒன்பது இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

22. மதுரை, திருவண்ணாமலை, தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகள் அவசரகால சிகிச்சை மற்றும் நிலைப்படுத்துதல் பிரிவுகளுக்கு (PREM)நவீன மருத்துவக் கருவிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

23. 69 பச்சிளம் குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கு (SNCU) ஒரு கோடியே மூன்று இலட்சம் ரூபாய் செலவில் T-Piece Resuscitator கருவிகள் வழங்கப்படும்.

24. தற்போது 530 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு உடல் நல பரிசோதனைகள் செய்யும் உன்னத "அம்மா ஆரோக்கியத் திட்டம்" மேலும் 100 மையங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

25. 834 துணை சுகாதார மையங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியிலுள்ள 140 நகர்ப்புற சுகாதார மையங்களில் மக்கள் தொகை மற்றும் சமூகம் சார்ந்த தொற்றா நோய்கள் கண்டறியும் நலத் திட்ட பெண் சுகாதார தன்னார்வலர்களுக்கு 4.61 கோடி ரூபாய் செலவில் ஊக்கத் தொகை வழங்கப்படும்.

26. விழுப்புரம், சிவகங்கை, கரூர், திருவண்ணாமலை மற்றும் புதுக்கோட்டை ஆகிய 5 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவி (Mammogram) 1.5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

27. எழும்பூர் தாய்சேய் நல மருத்துவமனை, கஸ்தூரிபாய்காந்தி தாய்சேய் நல மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம் மருத்துவமனை, ஓட்டேரி மற்றும் சேத்துப்பட்டு காசநோய் மருத்துவமனைகள், சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி,காரப்பேட்டை அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனைமற்றும்6 அரசு மருத்துவமனைகளில்சி.டி.ஸ்கேன் கருவிகள் (C.T. Scan) 13.5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

28. கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 10 மாவட்டங்களில் காசநோய் பிரிவுகளுக்கு நடமாடும் நுண்கதிர்வீச்சு கருவிகள் (Mobile X-Ray) மூன்றுகோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

29. தமிழகம் முழுவதும் உள்ள காசநோயாளிகள், அவர்களது சிகிச்சை காலம் முழுவதும் மாத்திரை உட்கொள்ளும் முறை, நவீன தொழில்நுட்ப உதவியுடன் கண்காணிக்கத் தேவையான '99 DOTS Sleeves' செயலி 2.2 கோடி ரூபாய் செலவில் உருவாக்கி செயல்படுத்தப்படும்.

30. காசநோயாளிகள் குறித்த சிகிச்சை விவரங்களை பதிவு செய்வதற்காக களப்பணியாளர்களுக்கு 528 புதிய கையடக்க கணினிகள் 6.76 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

31. 2025–க்குள் காசநோயை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில், தமிழகம் முழுவதும் உள்ள மருந்து கடைகளில் விற்பனை செய்யப்படும் காசநோய் சிகிச்சைக்கான மருந்துகளின் விற்பனை பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டு தொடர் சிகிச்சை கண்காணிக்கப்படும்.

32. தொழுநோய் பாதிப்பு உள்ள 87 வட்டாரங்களில் வீடு வீடாக சென்று தொழுநோய் பாதிப்பு கண்டறிந்துசிகிச்சையளிக்கும் பணிகள் 87 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

33. சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் , கல்லீரல் பாதிப்பு விளிம்பு நிலை நோயாளிகளுக்கான ஸ்டெம் செல் சிகிச்சைக்கு, பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் ஆராய்ச்சிகள் 4.3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.மேலும், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 13 இலட்சம் ரூபாய் செலவில் வைரல் ஹெபடைடிஸ் கண்காணிப்பு மையம் அமைக்கப்படும்.

34. பல்வேறு வகையான காய்ச்சல்களை கண்டறிந்து சிகிச்சையளித்திடவும், காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், ஒருங்கிணைந்தகாய்ச்சல் கண்காணிப்பு, சிகிச்சை மற்றும் தடுப்பு திட்டம் திருப்பூர் மாவட்டத்தில் 4.35 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

35. தமிழகத்தில் கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு, மலேரியா, சிக்கன்குனியா போன்ற தொற்றுநோய்களை கட்டுப்படுத்தவும், நோய்களில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கவும்12.93 கோடி ரூபாய் செலவில் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

36. டெங்கு மற்றும் சிக்குன்குனியா காய்ச்சல்களை தடுக்கும் நிலவேம்பு குடிநீர் வழங்குதல் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்காக இந்த நிதியாண்டிலும் இரண்டு கோடி ரூபாய் செலவில் தொடர் பணிகள் மேற்கொள்ளப்படும்.

37. தன்சுத்தம் மற்றும் சுற்றுப்புறத் தூய்மை குறித்த விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் 35 வட்டாரங்களில் தலா ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை தேர்ந்தெடுத்து 2.62 கோடி ரூபாய் செலவில் "சுகாதார பூங்காக்கள்" அமைக்கப்படும்.

38. சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத் துறையின்,கை அறுவை சிகிச்சை ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு நிலையத்திற்கு சிறப்பு மருந்துகள் மற்றும் நவீன மருத்துவக் கருவிகள் 4.23 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

39. ஸ்டெம் செல் ஆராய்ச்சி மற்றும் சிகிச்சை முறைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செயல்பட்டு வரும் ஆய்வகம்,6.63 கோடி ரூபாய் செலவில் cGMP தரத்திற்கு மேம்படுத்தப்படும்.

40. சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ளபிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத் துறையின் கை அறுவை சிகிச்சை ஆராய்ச்சி மற்றும் கை மாற்று அறுவை சிகிச்சை பிரிவிற்கு, அதி நவீன வசதிகளுடன் தனி அறுவை அரங்கமும், தனிப்பிரிவும் 4.79 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

41. சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள சிறப்பு அடுக்குமாடி கட்டடத்திற்கு கூடுதல் வசதிகள்9.92 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

42. சென்னைஇராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நோயாளிகளின் நலன் கருதி சாய்தள வசதிகள்6.36 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

43. சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, மகப்பேறு நோயியல் நிலையம் மற்றும் அரசு மகளிர் மற்றும் சிறார் நல மருத்துவமனைகளுக்கு புதிய தீ விபத்து தடுப்பு மற்றும் பாதுகாப்பு கருவிகள் 4.1 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

44. தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் நவீன புறநோயாளிகள் பிரிவு ஆறு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

45. 5 மாவட்டங்களில் வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்கள் ஐந்து கோடி ரூபாய் செலவில் இரண்டாண்டுகளில் கட்டப்படும்.

46. ஜெனரேட்டர் மற்றும் உயர் அழுத்த மின் வசதிகள் 27.34 கோடி ரூபாய் செலவில் 19 அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும்.

47. நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் அறுவை அரங்கமும் 12 படுக்கைகள் கொண்ட அறுவை சிகிச்சை பின்கவனிப்பு பிரிவும் 1.32 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

48. விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சைக்கென தனிப்பிரிவு 1.64 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

49. மருத்துவ அலுவலர் குடியிருப்புகள் 19 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 6.99 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்படும்.

50. மலைவாழ் மக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு நீலகிரி, ஜவ்வாதுமலை, கல்வராயன்மலை, ஏலகிரி, ஏற்காடு, கொல்லிமலை, கொடைக்கானல் ஆகிய மலைப் பகுதிகளில்உள்ள 64 துணை சுகாதார நிலையங்களுக்கு 18.8 கோடி ரூபாய் செலவில் சொந்த கட்டடங்கள் கட்டப்படும்.

51. 19 வட்டாரங்களில் 100 துணை சுகாதார நிலையங்களுக்கு 20.48 கோடி ரூபாய் செலவில் சொந்த கட்டடங்கள் கட்டப்படும்.

52. தமிழகத்தில் உள்ள 309 அரசு மருத்துவமனைகள், 22 அரசு மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த 55 மருத்துவமனைகள்,இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 105 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவ தகவல் மேலாண்மைத் திட்டம் 37 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்பட்டு திறம்பட செயல்படுத்தப்படும்.

53. தாய்சேய் நலப் பணி, பிறப்பு மற்றும் இறப்பு பதிவிற்காக 985 துணை சுகாதார நிலையங்களுக்கு பயோமெட்ரிக் கருவிகள் 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

54. எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், குழந்தைகளுக்கான குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் மையம் (DEIC) 1.5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

55. சென்னை குழந்தைகள் நல மருத்துவமனை, சேலம், மதுரை, தர்மபுரி மற்றும் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கான குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் மாவட்ட மையம் மூலமாக (DEIC) ஹீமோகுளோபினோபதி நோயாளிகளுக்கு 1.25 கோடி ரூபாய் செலவில் சிகிச்சை அளிக்கப்படும்.

56. 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஹீமோகுளோபினோபதி சிகிச்சை பிரிவிற்கு 8 செவிலியர்கள் 16 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக நியமனம் செய்யப்படுவார்கள்.

57. தலசீமியா மற்றும் ஹீமோபிலியா போன்ற அரிய வகை மரபு நோய்களுக்கான சிகிச்சை அளிப்பதற்கு தேவையான மருந்துகள் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் 18.84 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

58. இந்த ஆண்டு முதல் கூடுதலாக திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் வேலூர் மாநகராட்சிகளில் தேசிய சிறார் நலத் திட்டத்தின் கீழ் 8 நடமாடும் பள்ளி மருத்துவக் குழுக்கள் 1.4 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

59. செய்யாறு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், நுண்கதிர் வீச்சாளர்கள் மற்றும் ஆய்வக நுட்புனர்கள் பணியிடங்கள் 40 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

60. 9 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் 3 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள வலி நிவாரணம் மற்றும் நோய் தணிப்பு பிரிவுகளுக்கு (Pain & Palliative Care Unit)2.11 கோடி ரூபாய் செலவில் மருத்துவ அலுவலர், செவிலியர் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

61. குடும்ப நலத்திட்டத்தில் குழந்தை பிறப்புகளுக்கு இடையே போதிய இடைவெளியை உறுதிப்படுத்த பிரசவத்திற்குப்பின் கருத்தடை வளையம் (PPIUCD)பொருத்திக் கொள்ளும் தாய்மார்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.300 வழங்கப்படும்.

62. மலைப்பகுதிகள் அதிகம் உள்ள வட்டாரங்களில் எட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களுக்கு இரண்டு கோடி ரூபாய் செலவில் புதிதாக குடியிருப்புகள் கட்டப்படும்.

63. வால்பாறை மற்றும் சேராப்பட்டு மலைப்பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில்மகப்பேறு பிரிவுகள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

64. மலைப் பகுதிகள் அதிகம் உள்ள வட்டாரங்களில் செயல்படும் வால்பாறை, ஒக்கேனக்கல், பிக்கிலி, சித்தேரி, கருமந்துரை, கரியலூர் ஆகிய 6 ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்நோயாளிகள் பிரிவுகள் 1.27 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

65. மலைப் பிரதேசங்களில் உள்ள 18 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட 23 ஆரம்ப சுகாதார நிலையங்களில்புதிதாக செவிலியர் குடியிருப்புகள் ஏழு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

66. காவேரிப்பட்டினம், காணை, கொளப்பலூர், ஆதமங்கலம்புதூர் மற்றும் சத்திரப்பட்டி ஆகிய 5 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புற நோயாளிகள் பிரிவு மூன்று கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்படும்.

67. சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், தருமபுரி, செங்கல்பட்டு மற்றும் கீழ்ப்பாக்கம் ஆகிய 6 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் காது வால் நரம்பு உள்வைப்பு கருவி (Cochlear Implant) பொருத்தும் மையங்கள் 4.37 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

68. சேலம், தருமபுரி, வேலூர், விழுப்புரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய 5 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஆர்.டி.பி.சி.ஆர் (RTPCR) ஆய்வக மையங்கள் 2.18 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

69. கரூர் மாவட்டம் குளித்தலை அரசு மருத்துவமனையில் புதிதாக இரத்த வங்கியும், கோயம்புத்தூர் ஈ.எஸ்.ஐ. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குருதி பகுப்பாய்வு மையமும்70 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

70. பெருநகர சென்னை மாநகராட்சி,இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு1.24 கோடி ரூபாய் செலவில் ‘‘தரச்சான்று விருதுகள்’’ வழங்கப்படும்.

71. 90 இலட்சம் ரூபாய் செலவில் அரசு மருத்துவமனைகளில் உலகத்தரத்திற்கு இணையாக பிரசவ அறைகளை மேம்படுத்தும் தர மேம்பாட்டுத் திட்டம் துவங்கப்படும்.

72. உணவு பாதுகாப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட, புகார் மற்றும் குறைகளின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க உணவு பாதுகாப்புத் துறைக்கென தனிவலைதளம் மற்றும் கைபேசி செயலி 20 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

73. தமிழ்நாட்டில் உள்ள 100 சுற்றுலா தலங்களில் உணவுப் பாதுகாப்பு தகவல் தொடர்பு மையங்கள் (Food Safety Hubs) 15 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

74. மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மன நல அவசர சிகிச்சை மற்றும் பாதுகாப்பு மையங்கள் (ECRC) சென்னை மாநகராட்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில்,ஒரு கோடியே மூன்று இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

75. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நான்காண்டுகாலமருத்துவம் சார்ந்த பட்டப்படிப்புகள் தொடங்கப்படும்.

76. அனைத்து மாவட்டங்களிலும், துணை சுகாதார நிலையங்கள் முதல் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் வரை மேற்கொள்ளப்படும் பல்வேறு சுகாதார திட்டப் பணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்கள் பங்கேற்புடன் அப்பணிகளை கண்காணிக்க 4.11 கோடி ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்படும் (Monitoring of Health Activities through Community Participation).

77. உணவில் உள்ள கலப்படம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திட மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கு கலப்படங்களை கண்டறியும் செயல்முறை விளக்கங்கள் குறித்து 16 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

78. ஒங்கல்வாடி, சோளக்காடு மற்றும் கரியாலூர் ஆகிய 3 ஆரம்ப சுகாதார நிலையங்களில் துணை செவிலியர்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய ஊரக பயிற்சி நிலையங்கள் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

79. உயிர்காக்கும் உன்னத திட்டமான STEMIசிகிச்சைத் திட்டத்தின்கீழ்108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தொழில்நுட்புனர்களுக்கு ஸ்டெமி நெறிமுறைகள் (Protocol) குறித்த பயிற்சி 32 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

80. அனைத்து மாவட்டங்களிலும் பாதுகாப்பான குடிநீர், சுற்றுப்புறத் தூய்மை, ஊட்டச்சத்து குறித்துசுகாதாரப் பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி ஒரு கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

81. பெண் கருக்கொலையை முற்றிலுமாக தடுக்கும் பொருட்டு மருத்துவ அலுவலர் மற்றும் செவிலியர்களுக்கு "பாலின தேர்வு செய்யும் தடை சட்டம்–1994" குறித்து சிறப்பு பயிற்சி 16 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்

82. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் ஓட்டுநர்களுக்கு வாகனங்களின் அன்றாட பராமரிப்பு மற்றும் பாதுகாப்பான இயக்கம் குறித்த பயிற்சிகள் வழங்கப்படும். களப்பணிகளை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் அரசு தாய்மை துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு இருசக்கர வாகன இயக்க பயிற்சி அளிக்கப்படும்.

83. மருத்துவ மேற்படிப்பு மாணவர்களுக்கு போட்டித் தேர்விற்கான இலவச பயிற்சி மையங்கள் துவங்கப்படும்.

84. மனநல நோயாளிகளுக்கான மருத்துவ சேவைக்காக அனைத்து மாவட்டங்களுக்கும்32 வாகனங்கள், 96 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

85. தமிழகத்தில் மேலும் 10 மாநகராட்சிகளில் உள்ள அரசு பள்ளிகளில் பாதுகாப்பான ஊட்டச்சத்து உணவு குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி SNF@School (Safe Nutrition Food awarness and training at School) 10 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

86. 15 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் பச்சிளம் குழந்தைகளின் உயிர் காக்கும் தாய்ப்பால் வங்கிகள் ரூ 1.5 கோடி செலவில் விரிவுபடுத்தப்படும்.

87. தமிழகத்தில்வளரிளம் பருவத்தினர் மற்றும் இள வயதினரின் மன அழுத்தத்தைக் குறைத்து தற்கொலை எண்ணங்களைத் தடுக்கும் நோக்கத்தோடு அரசு மூலமாகவும், தனியார் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்தும், கட்டணமில்லாஉளவியல் ஆலோசனை சேவைகளும், மருத்துவ சேவைகளும் வழங்கப்படும்.

88. மருத்துவ சேவை மேலாண்மை (Health Service Management) தொழில்நுட்ப பயிற்சி பெறும் வகையில் ஆஸ்திரேலிய பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படும்.

89. அரசுமருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும்மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் Home Health Care Course என்ற ஓராண்டு பட்டயப் படிப்பு தொடங்கப்படும்.

90. ஆறு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மூன்று மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் DNB மருத்துவ பட்ட மேற்படிப்பிற்கான 42 கூடுதல் இடங்கள் 2.52 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

91. 16 அரசு மருத்துவமனைகளில், 5 பிரிவுகளில்,மருத்துவம் சார்ந்த உதவியாளர்களுக்கான நான்காண்டுகால பட்டப் படிப்பு 1.4 கோடி ரூபாய் செலவில் புதிதாக தொடங்கப்படும்.

92. ஏழு அரசு மருத்துவமனைகளில் மருத்துவத் திறன் மேம்பாட்டுக் கூடங்கள் 10.85 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

93. தேசிய கல்விசார் களஞ்சியம் மூலம் மருத்துவக் கல்வி மாணவர்களின் சான்றிதழ்கள் டிஜிட்டல் மயமாக்கம் செய்யப்படும்.

94. எழும்பூர், பூவிருந்தவல்லி, மதுரை, சேலம், விழுப்புரம் மற்றும் திண்டுக்கல் காந்திகிராமம் ஆகிய இடங்களில் உள்ள மண்டல பயிற்சி நிறுவனங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான செயற்கை உடல் உறுப்பு மாதிரிகளும் (Mannequins), ஒலி மற்றும் ஒளி அமைப்பு கருவிகளும் 94 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

95. தமிழ்நாட்டின் அனைத்து அரசு மருத்துவமனைகள் / சுகாதார நிலையங்களில் தேசிய தர நிர்ணயத் திட்டம் மூலம் மருத்துவ சேவைகளின் தரத்தை மேம்படுத்தி சான்றிதழ் வழங்கி சிறப்பாக சேவையாற்றும் மருத்துவமனைகளுக்கு ஊக்கப்பரிசு வழங்கப்படும்.

96. 23 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 40அரசு மருத்துவமனைகள் மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள 3 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 17.5 கோடி ரூபாய் செலவில்200 புதிய அதிநவீன டயாலிசிஸ் கருவிகள் வழங்கப்படும்.

97. கீழ்ப்பாக்கம் மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் கண் சிகிச்சை பிரிவுகளுக்கு அதிநவீனக் கருவிகள் 3.25 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

98. 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், 13 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் முதியோர் நலப் பிரிவுகள் (National Program for Health Care in Elderly) தொடங்க தேவையான மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதாரப் பணியாளர்கள் 5.12 கோடி ரூபாய் செலவில் நியமனம் செய்யப்படுவார்கள்.

99. அவசரகாலங்களில் உயிர்காக்கும் பணிகளை விரைவாகவும், திறம்படவும் மேற்கொள்ளும் வகையில் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில்திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்.

100. சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை இராஜாஜி மருத்துவமனைகளில் மூன்றாம் பாலினர் (Transgender) சிகிச்சைக்கான சிறப்புப் பிரிவு 30 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

101. அனைத்து மாவட்டங்களிலும் மனநலப் பிரிவுகளில், முன்பயணத்திட்ட முறையில் குறிப்பிட்ட மருத்துவமனைகளில் குறிப்பிட்ட நாட்களில் மன நோயாளிகளுக்கு நேரில் சென்று சிகிச்சையளிக்கும் வகையில் மனநல மருத்துவர் பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டு 2.34 கோடி ரூபாய் செலவில் “Satellite Clinics” ஏற்படுத்தப்படும்.

102. கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாம்புக்கடி மற்றும் விஷக்கடிகளில் இருந்து உயிர்காக்கும் பொருட்டு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு 22 இலட்சம் ரூபாய் செலவில் விஷமுறிவு மேலாண்மை குறித்த சிறப்பு பயிற்சி அளிக்கப்படும்.

103. நீலகிரி மாவட்டம் எமரால்டு பகுதியில் புதிய வட்டம் சாரா மருத்துவமனை 18.54 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

104. 25 மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாக பல் சிகிச்சைப் பிரிவுகள் 75 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

105. 50 அரசு மருத்துவமனைகளுக்கு நவீன மருத்துவக் கருவிகள் வழங்கி மேம்படுத்தப்படும்.

106. இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, எழும்பூர் தாய்சேய் நல மருத்துவமனை, காரப்பேட்டை அறிஞர் அண்ணா அரசு புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தற்போதுள்ள கோபால்ட் சிகிச்சை அலகுகள் 28 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும்.

107. திருப்பூர், கிருஷ்ணகிரி மாவட்ட அரசு மருத்துவமனைகள், திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு புதிதாக எம்.ஆர்.ஐ ஸ்கேன் கருவிகள் 30 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

108. புகைப்பிரியர்களை ஈர்க்கும் வகையில் எலக்ட்ரானிக் சிகரெட்டுகளை பிடிப்பதால் ஆபத்தில்லை என விளம்பரப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றன.தமிழக அரசு மெல்லும் புகையிலை பொருட்களை ஏற்கனவே தடை செய்துள்ள நிலையில் தமிழ்நாட்டில் இந்த எலக்ட்ரானிக் சிகரெட்டுகளும்மக்களின் உடல் நலன் கருதி தடை செய்யப்படும்.